அரசாங்க நிருவாக சுற்று நிருப இல: 17/88.

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு- 07.
1988.05. 26 ஆம் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர் யாவருக்கும்.

**அரசாங்க சேவை சகாயநிதி**
**திணைக்களங்களினால் பகுதிக்கொடுப்பனவு செய்வது நிறுத்துதல்**

அரசாங்க சேவை சகாயநிதியில் உறுப்புரிமை முடிவுபெற்ற தொகையின் 85% மும் விருப்பத்தின் பேரில் செலுத்திய உதவு தொகையில் 100% கொடுப்பனவு செய்தல திணைக்களங்களுக்கு அதிகாரம் வழங்கிய 1977.08.09 ஆம் திகதி இல 37 வது ஓய்வூதியத் திணைக்கள சுற்று நிருபத்தின் 6 வது பிரிவில் கூறப்பட்டதைக் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

2. நிதியில் உதவுதொகை முடிவுபெற்ற உதவுநர்க்கு 1988.07.01 ஆம் திகதியிலிருந்து எல்லாவித பகுதிக் கொடுப்பனவு செய்தலும் நிறுத்தப்பட்டு அதற்குப்பதிலாக உதவுதொகையை மீள வழங்குதல் தொடர்பான விண்ணப்பப் படிவம் அரசாங்க சேவை சகாயநிதிச் செயலாளருக்குச் சமர்ப்பிக்கும்படி இத்தால் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். உதவுதொகை பெறப்பட்ட எல்லாக் காலஎல்லைக்கும் சரிவர சமன்படுத்தப்பட்ட அறவீடுபதிவேடு அவருக்கு அனுப்பியிருந்தால் ஒரு மாதத்திற்குள் முழு நடுத்தீர்வும் கொடுப்பனவு அனுமதிக்கப்படுவதை அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

3. அரசாங்க சேவை சகாயநிதியின் செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட நடுத்தீர்வை அரசாங்கசேவை சகாயநிதிக் கணக்கிற்கு பற்றுவைத்து கொடுப்பனவு செய்து அதன் மூல உறுதிச்சீட்டு (வவுச்சர்) உடன் நடுத்தீர்வையின் இணைப்பிரதியும் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் அவருக்குச்சமர்ப்பிக்க வேண்டும்.

ஒப்பம்: டி.பீ.ஐ.பீ.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.